முதன்மை இயக்குநர் (நெ) அலுவலகம்,
கிண்டி, சென்னை – 25.

குறிப்பாணை எண். 33865 / நிர் 7 / 2003, நாள்.04.07.2022

பொருள்: நிறுவனம் – நெடுஞ்சாலைத்துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.வி.லியோ ப்ரான்கிலின் டைட்டஸ் , இளநிலை உதவியாளராக பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – அரசாணை அனுப்புதல் – தொடர்பாக .

பார்வை : அரசாணை (2ப) எண்.18, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.எம்.1) துறை, நாள்.21.06.2022.

----

பார்வையில் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு கும்பகோணம் (நெ) சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம் கோட்ட அலுவலகத்தில் பணிபுரியும் திரு.வி.லியோ ப்ரான்கிலின் டைட்டஸ், இளநிலை உதவியாளர் அவர்களுக்கு அவர் பணியில் சேர்ந்த நாள் 30.12.2019மு.ப முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையை தனியருக்கு சார்ப்பு செய்ய ஏதுவாக கோட்டப் பொறியாளர் (நெ) சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், கும்பகோணம் அவர்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

**இணைப்பு** – பார்வையில் காணும் அரசாணை(அசல்)

பி.ஆர்.குமார்,
முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலை.

**பெறுநர்:**
கோட்டப் பொறியாளர் (நெ) சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம்,
கும்பகோணம்.
**நகல்:**
~~கோட்டப்~~ பொறியாளர் (நெ) சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், திருச்சி.
கண்காணிப்பு

// உண்மை நகல் / உத்தரவின்படி /அனுப்பப்படுகிறது //

4/7/2022
கண்காணிப்பாளர்

4/7/22

Scanned with CamScanner

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – நெடுஞ்சாலைத் துறை – கருணையடிப்படையில் பணி நியமனம் – காலஞ் சென்ற அரசு ஊழியர் திரு.அ.வின்சென்ட்ராஜ் என்பவரின் மகன் திரு.வி.லியோ ப்ரான்கிலின் டைட்டஸ் என்பவர் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2ப) எண்.18 நாள்: 21.06.2022

சுபகிருது, ஆனி 07, திருவள்ளுவர் ஆண்டு 2053.

**படிக்கவும்:–**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 26.02.2021.
3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை கடித எண்.33865/ நிர்7/2003, நாள் 31.05.2022.

---------

**ஆணை:–**

நெடுஞ்சாலைத் துறையில் மண்ணச்சநல்லூர் (நெ), பிரிவு அலுவலகத்தில் சாலைப் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.அ.வின்சென்ட்ராஜ் என்பவர் 08.10.2001 அன்று பணியிடையே காலமானார். அவரது பணி சாலை ஆய்வாளர் பதவியில் 20.12.1975 மு.ப முதல் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. அவரது மகன் திரு.வி.லியோ ப்ரான்கிலின் டைட்டஸ் என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் நெடுஞ்சாலைத் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 30.12.2019 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். அவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 17 ஆண்டுகள் 10 மாதம் ஆகும். கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்த நாளில் தனயரின் வயது 19 ஆண்டுகள் 1 மாதம் ஆகும். எனவே, தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும் அவரது குடும்பம் வறிய

Scanned with CamScanner

நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் அவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.வி.லியோ ப்ரான்கிலின் டைட்டஸ் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 30.12.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு அரசின் ஆணையினைப் பெற்றுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறையின் முதன்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத் துறையில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.வி.லியோ ப்ரான்கிலின் டைட்டஸ் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 30.12.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 25.
திரு.வி.லியோ ப்ரான்கிலின் டைட்டஸ், இளநிலை உதவியாளர்(நெ).
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை25. வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை–600018.

**நகல்:–**
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை,சென்னை–9.
அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.
(கோ.எண்.9375/எச்.எம்.1/2022)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செல்லப்பன்
பிரிவு அலுவலர்

Scanned with CamScanner